



King Viswa - Tamil Comics Ulagam




ல-1


எஞ்சின்கள் மீண்டும் உயிர் பெற்று விட்டன!
விமானம் திரும்பவும் கட்டுப்பாட்-டுக்குள் வந்து விட்டது!
பிரம்மாண்டமான மாளிகையினுள்-
ஆனாலும் மாளிகை கட்டிடம் திடத்தன்மை இழக்கத் தூண்டப்பட்ட வேகம் போதாது. மயிரிழையில் தவிர்க்கப் பட்டு விட்டது பயங்கர விபத்து ஒன்று!
விமானம் பத்திரமாக விலகிச் செல்கிறது!
விமான எஞ்சின்கள் தற்காலிகமாக இயக்கமிழந்து போக மின்சார கோளாறு காரண மாகி விட்டிருக்கக் கூடும்!
நீங்கள் காண்பது கனவல்ல வாசகர்களே! கட்டுப்பாட்டு அமைப்பின் பொறுப்பில் இருந்தவை அனைத்தும் பேய்கள்தான்-
நிலவர அறிக்கையை கேட்க பிரியப்படு கிறேன்!
மாஸ்டருக்கு எல்லாமே கனகச்சித மாக நடந்தாகணும்!
ஹாங்காங்-கட்டுப் பாட்டில் இருக்கிறது!
ஸிட்னியில் பூரண அமைதி நிலவுகிறது!
ரோம் பிரச்னை ஏதுமில்லை!
LONDON
அபாயம் - அபாயம் - இலண்டனில் துப்பாக்கிச் சூடு ஒன்று நடக்கப் போகிறது!
4


நொடிப் பொழுது அவகாசமும் எடுத்துக் கொள்ளாமல் நாம் உடனே இலண்டன் போய்சேர வேண்டும்!
மினி பேய், புன்னகை பேய், பயங்கரபேய் மூவரும் வாருங்கள் என்னோடு - பயண அறைக்கு!
அதையடுத்து-
நாங்கள் ரெடி!
ஸ்கூட்டி-எங்களை அனுப்பு கீழே!
இலண்டனில்-
ஓ.கே. ஜாக்! போலீஸாரிடம் எங்களை நீ காட்டி கொடுத்த துரோகத்திற்கு மரணம் தான் ஏற்ற தண்டனை- இதோ!
ப்ளீஸ் டிக்- இந்த ஒரு தடவை என்னை மன்-னித்து விடு- ப்ளீஸ்!
நேரத்திற்கு வந்து சேர்ந்து விட்டோம்-முதலில் பயங்கரப் பேய் கைவரிசையை காட்டட்டும்!
மறுகணம்-
ஈஈஈஈஈக்க்!
ஆவ் கிட்டே வராதே!
ஹே- ஏ-ஏ என்ன இது?
ஐயோ- ஓடிப் போயிடணும்!
ஈஈஈக்!
ஐயோ-அம்மா!
5


இனியும் இங்கே இருப்பது ஆபத்து- வாருங்கள் காரில் ஏறி ஓடிப் போயிடலாம்!
ஆனல் கார் வேகமாக ஓடத் தொடங்கியதும்-
ஈஈஈக்- இங்கேயும் வந்து விட்டனவே!
அம்பி பாதையைப் பார்த்து ஓட்டு!
எச்சரித்தேன்- நீ கேட்கலே!
ஆவ்வ்!
டமார்!
ஆ ஆஆ!
கிராஷ்!




கட்டிடத்தினுள்
ஏய்- யாரது இப்படி முன் அனுமதியில்லாமல் நுழைகிறது?
யாரோ தண்ணியடிச்சுட்டு காரோட்டருன்னு தோணுது- இன்ஸ்பெக்டர்!
அட நாம் நீண்ட காலமாக தேடியலையும் பயங்கர குற்றவாளிகளான டிக் மில்லர், ஸ்கார் பேஸ், ஹெர்பி அல்லவா இவர்கள்!
அடுத்த தடவை இது மாதிரி அத்து மீறி நுழைஞ்சேன்னு தோலே உரித்து விடுவேன்- ஜாக்கிரதை! ஆனல் இந்த எச்சரிக்கை அர்த்தமற்றது என்றுதோணுது! ஏன்னு- அடுத்த இருபது வருஷத்துக்கு நீ ஜெயில் வாசம பண்ணப் போவது உறுதி!
வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது-இனி நாம் ஊர் திரும்பலாம்!
ஸ்கூட்டி! எங்களை ஏற்று மேலே!
உயிரோடு இருந்த போது பூமியில் நீதி, நியாயத்தை நிலைநாட்ட பணியாற்றி வந்த துப்பறியும் நிபுணர்கள் நாங்கள். செத்துப் போய் பேயாகி விட்ட பிறகும் எங்களுடைய பணி தொடருகிறது. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே?


கலிபோர்னியா நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஹாங்கின் தன் மகனோடு பொழுது போக்காக மீன் பிடிக்க விசைப் படகில் போய்க் கொண்டிருந்தார்
கரையிலிருந்து வெகுதொலைவு வந்து விட்டோம். மீன்பிடிக்கிற இடம் இன்னும் எவ்வளவு தொலைவில் இருக்கிறது டாடி?
இன்னும் கொஞ்ச தூரம்தான்! பொறுமையாக இரு ஹாரி!
ஆனால்-அப்போது-
டாடி - அந்தப் படகை பாருங்கள்!
முட்டாள்-நேராக நம்மை குறிவைத்து வருகிறானே-
படகிலே இருந்த எல்லோரும் தண்ணீருக்குள்ளே குதிச்சுட்டாங்க-
டமார்!
சண்டாளர்கள்! நம் படகுக்கு பலத்த சேதம்-முழ்கப் போகிறது!
டாடி மேலே பாருங்களேன்!




ஒரு மீட்பு ஹெலிகாப்டர்!
கோடீஸ்வரர் ஹாங்கின்! அவர்களே- மேலேறி வருக!
அந்த கேபிள்களை நன்றாகப் பிடிச்சுக்கோ ஹாரி!
என்ன விவகாரம் இது உங்களுடைய நோக்கம் தான் என்ன?
இன்னுமா புரியவில்லை? கடத்தல் சமாச்சாரம் இது ஹாங்கின்
உங்களை விடுவிக்க மீட்புத் தொகையாக பல கோடிகள் கேட்கப் போகிறோம்!
'கடத்தல்,' 'மீட்புத் தொகை' என்ற வார்த்தைகள் அங்கே பேய்ப்படையின் தலைமையகத்தில் தானியங்கி எச்சரிக்கை அமைப்பைத் தூண்டி விடவே
ஆபத்து- ஆபத்து! செக்ஷன் ஏழு-எமர்ஜென்ஸி குறியீடு 3!
CALIFORNIA
3
கடத்தல் விவகாரம்! அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?
தெற்கு நோக்கி விரையும் ஒரு ஹெலிகாப்டரில்!


மாஸ்டர் பேய் மளமளவென்று உத்தரவுகளை பிறப்பித்தது-
பறக்கும் பேய் உடனே அங்கே விரையட்டும்! மற்றவர்களை திரட்டிக் கொண்டு நான் பின்னால் வருகிறேன்!
போக்குவரத்து செக்ஷன் ஆயத்தமாகட்டும்!
ஹெலிகாப்டரில்-
உங்களை நான் சும்மா விடப் போவதில்லை!
ஆமாம்-சும்மா விடாதீர்கள்! பணக்காரர்களாக்கி விடுங்கள் எங்களை! ஹீ ஹீ ஹீ!
ஹே-பாஸ்!
ஹே பாஸ்!
ஏண்டா நாய் மாதிரி ஊளை யிடறே-கவனமாக ஓட்டிச் செல்!
பாஸ்....
பாஸ்....
பாஸ்...




ஏன் திடீர்னு இப்படி இருட்டிடுச்சு!
ஆவ் என்னை சுட்டுட்டீங்களே பாஸ்- அநியாயமா!
கிறுக்குத்தனமான பிதற்றலுக்கு இது தான் பரிசு- மரியாதையா விளக்கை போடுடா- கழுதை!
இந்த வெளிச்சம் போதுமா- இன்னும் கொஞ்சம் வேணுமா?
ஓ-ஒ-ரு ராட்சஸ பறவை நம் ஹெலிகாப்டரை விழுங்கிடுச்சு பாஸ்!
ஹே-யா-யார்-நீங்க?
உங்களைக் 'கவனிக்க' வந்திருக்கிறோம்!
பறக்கும் பேய் இனி மறைந்து விடலாம்!
மறுகணம் - ஹெலிகாப்டர் மீண்டும் திறந்த வெளியில் இருந்தது-
ஐயோ எஞ்சின் இயக்க மிழந்து போச்சு!
ஹெலிகாப்டர் கீழே விழுந்து நொறுங்கப் போகிறது-தொலைந்தோம்!
ஹெலிகாப்டர் தறிகெட்டுப்போய் தலை குப்புற கீழிறங்கியது-
எல்லோரும் கூண்டோடு கைலாசம் போகப்போறோம்!
ஐயோ - யாராச்சும் எங்களை காப்பாற்றுங்களேன்!
எவ்வளவு முயன்றும் எஞ்சினைத் தூண்டி மீண்டும் இயங்கச்செய்ய முடியலை!
நல்லவங்களும் சேர்ந்து செத்துப் போவாங்களே மாஸ்டர். நாம் ஏதாவது செய்தாக வேண்டும்!
ம்ம்- பாரேன் என்ன நடக்கிறது என்று!



உயிர் பிழைக்கணும்னு தயங்காம வெளியே குதிச்சுடு!
மாட்டேன் -பாரசூட் கட்டிக்காம குதிச்சா ஒரு எலும்புகூட மிஞ்சாது!
அடுத்து ஹாரியையும், கடத்தல்காரர்களையும் வெளியே தள்ளி விட்டது மாஸ்டர் பேய்-
தொப்!
ஊஊஊ!
ஆ ஆ ஆ!
விவாதம் பண்ணிக்கிட்டிருக்க அவகாசம் இல்லை! அதனாலே நானே உன்னை தள்ளிவிட்டுட்டேன்!
ஈஈஈ!
அவர்களை காப்பாற்றுவீங்கன்னு எதிர்பார்த்தேன். ஆனால் இப்படி வெளியே தள்ளிவிட்டீர்களே!
உஷ் பொறுத்திருந்து பார்- புரியும்!
மறுகணம்-
ஐயோ- எனக்கு என்ன ஆச்சு?
உருவம் மாற்றமடைந்து வருகிறதே!
பந்து போல் ஆயிட்டோம்!
அனைத்தும் நொடிப் பொழுதுக்குள்!
தரையில் அடித்த ரப்பர் பந்தாக..
பொத்!



எகிறித் தாவுகிறோம்!
இனி மறுபடியும் சுய உருவத்திற்கு மாற்றி விடலாம்!
மீண்டும் மனித உருவம் பெறுங்கள்!
ஆனால் அந்த கோடீஸ்வரரும் அவருடைய மகனும் இன்னமும்
ஏய்ய்-மாயப் பிசாசுகளே- இந்த தோட்டா உங்களை என்னதான் செய்கிறது என்று பார்ப்போம்!
ச்சொ! அவர்கள் என் சக்தி எல்லைக்கு அப்பால் போய் விட்டதுதான் காரணம்!
ஹி ஹி வேண்-டாம்- வி-விட்டு என்னை- கிச்சுக் கிச்சு- மூட்-டாதே தாங்கலை!
கீழே பயங்கர அருவி! நான் எதிர்பாராத விபரீதம்!
ஆ ஆ ஆ!


இந்த நேரத்தில் உருமாற்றம் நிகழ்கிறது ஆபத்தாயிற்றே!
நீந்தத் தெரியாது- மூழ்கிச் சாகப் போகிறோம்!
உதவி- ப்ளீஸ்!


மரணத்தின் நிழல் அவர்கள் மீது படியத் தொடங்கியது-
இதற்கு மேல் என்னால் தாக்குப் பிடிக்க முடியாது!
உதவி! உதவி!
தன் திட்டம் எதிர் பாராத திருப்பம் கண்டு விபரீதம் உருப்பெற்று விடவே, விரைந்து சிந்தித்தது மாஸ்-டர் பேய்-
ஆல்ரைட்! உடனடியாக உருப்பெருக்கமடைய வேண்டும் நான். இதோ- மும்மடங்காகி விட்டேன்-
பத்து மடங்காகி விட்டேன்- இது போதும்!
மறுகணம்·
ம்ம்ஹ!









## வாசகர் கடிதம்!

● **பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.**

எத்தனை ராட்சஸ ரோபோ வந்தாலும் நம் ஆர்ச்சிக்கு இணை ஆர்ச்சிதான். ஆர்தர் கானன்டாயிலின் 'ஷெர்லக் ஹோம்ஸ்' போல் நமது லயனில் ஒரு 'ஹெர்லக் ஷோம்ஸ்' வருகிறாரா? வரவேற்கிறோம்.

● **ஸ்பைடர் பிரியன், திருநெல்வேலி.**

நமது காமிக்ஸ் 'கதாநாயகன்' 'புரட்சித் தலைவர்' 'நல்லவனுக்கு நல்லவன்' 'தீயவர்களுக்கு தீயவன்' 'சூப்பர் ஸ்டார்' என்று எல்லாம் புகழ்பெற்ற 'ஸ்பைடர்' தோன்றும் 'மிஸ்டர் மர்மம்' வருகிறது என்று தெரிந்தவுடன. மகிழ்ச்சிக் கடலில் நான் தத்தளிக்கிறேன்.

● **R. காமேஷ் ராஜ். M. யாதவி, பழனிசெட்டிபட்டி.**

ஆர்ச்சியும், வில்லனின் இராட்சஸ ரோபோவும் மோதும் போது டக்கராக இருந்தது. ஆர்ச்சிக்கு நிகர் ஆர்ச்சிதான் சார். ஆர்ச்சி குழுவினருக்கு என் வாழ்த்துக்கள்.

● **N. ரவி' பாளையங்கோட்டை.**

அதிரடி ஆர்ச்சி அட்டையிலும் அதிரடிதான் செய்வாரா. ஆனாலும் ஆர்ச்சியை ஸ்பெஷலில் எல்லாம் ஓரங்கட்டி, டீஸ் செய்ததற்கு ஒட்டு மொத்தமாகத் தான் சாகஸம் செய்திருக்கிறார்.

● **K. N. தியாகராஜன், சென்னை 4.**

ஆர்ச்சிக்காக நாங்கள் பத்து மாதம் காத்திருந்தது வீண்போகவில்லை. அதிரடி சாகஸம் நிகழ்த்தி அசர வைத்து விட்டான் எங்கள் 'அதிரடி ஆர்ச்சி'.

● **I. ஆசிப், சென்னை-2.**

எந்த மாதமும் இல்லாமல் இந்த மாத 'அதிரடி ஆர்ச்சி' அசத்தி விட்டது. ஆர்ச்சியை கொஞ்ச காலம் பிரிவதுதான் வருத்தமாக உள்ளது எனக்கு.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஸர் ஆர்தர் கோனன் டாய்ல் ஒரு பிரபல ஆங்கில எழுத்தாளர்! சரித்திர நாவல்கள் எழுதி வந்த இவர் ஒரு மாறுதலுக்காக ''ஷெர்லக் ஹோம்ஸ்'' என்றதொரு துப்பறியும் கதாப்பாத்திரத்தை உருவாக்கினுர்! ஷெர்லக் ஹோம்ஸுடன் துப்பறிவதற்கு ''டாக்டர் வாட்ஸன்'' என்றதொரு துணைப் பாத்திரமும் உருவானது!

தன்னைச் சுற்றி நடப்பவதை ஆழமாகக் கவனித்து, மெல்லிய தடயங்களை பிரமாதமாகப் பயன்படுத்தி மர்மங்களின் முடிச்சை ஷெர்லக் ஹோம்ஸ் அவிழ்த்து வைப்பது போல கதைகள் பின்னப்பட்டிருந்தன.

இந்த நாவல்களுக்கு வரலாறு காணுத அளவிற்கு சர்வதேச அரங்கில் வரவேற்பு கிடைத்தது! இன்னும் கூட நவீன துப்பறியும் ஹீரோக்களுக்கு முன்னேடியாக விளங்குவது ''ஷெர்லக் ஹோம்ஸ்'' கதாபாத்திரம்தான்.

அந்த அமர கதாப்பாத்திரத்தை சற்றே 'உல்டா' செய்து நகைச்சுவை கலந்து இந்த இதழில் வழங்குகிறேம். படித்துப் பாருங்களேன்.





## ஹெர்லக் ஷோம்ஸ்:

இவர்தான் நமது துப்பறியும் ஹீரோ! இவரிடம் உள்ள விசேஷ ஆற்றல் என்ன வென்றுல் கண்ணிமைக்கும் நேரத்தில் நினைத்த வேஷத்திற்குத் தாவிவிடுவார்! குரங்காக மாற வேண்டுமா?-நொடியில் வேஷம் தயாராகிவிடும்! தேவைக்கேற்ப வேஷங்களை மாற்றி மர்மங்களை துப்புத் துலக்குவதே இவரது பணி!

## டாக்டர் வாஸ்டன்!

இவர் ஹெர்லக் ஷோம்ஸின் தோஸ்த் டாக்டர் வாஸ்டன் சற்றே மந்த புத்திக்காரர்! ஆனுல் தவருமல் ஷோம்ஸின் கேஸ்களில் பங்கேற்று விடுவார்! இருவரும் இணைபிரியா ஜோடி!

**ஒரு முக்கிய குறிப்பு:**

மேற்கத்திய நாடுகளில் எல்லோருக்குமே இரண்டு பெயர்கள் இருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். உதாரணத்திற்கு ஷெர்லக் ஷோம்ஸ்! இதில் இரண்டாவதாக வருவது குடும்பப் பெயர். 'ஷெர்லக்' என்பதே ஆசாமியின் பெயர்.

இந்தக் கதையில் ஆர்தர் எனும் ஒரு குடும்பத்தின் வாரிசுகளைப் பற்றிப் படிக்கப் போகிறீர்கள்! வாரிசுகள் அனைவருமே ஆர்தர் என்று அழைக்கப்படுவதால் குழப்பமடைய வேண்டாம். ஆர்தர் என்பது பொதுவான குடும்பப் பெயர் ''ஜான் ஆர்தர்''. ஜேக் ஆர்தர் என்று ஒவ்வொருக்கும் தனித்தனிப் பெயருண்டு. கதையைப் படிக்கும் போது இதை கவனித்துக் கொள்ளுங்கள்!







என்னது- காயமுற்றிருக்கிறாரா? எப்படி அவ்வளவு தீர்மானமாகச் சொல்கிறாய் நீ?
போர்வை ஓரத்தில் இரத்தக் கசிவு தென்பட்டது. காலில் ஷூ கூட நடந்து செல்லும் விவசாயியின் கையில் அவனுக்கு சொந்தமில்லாத வாக்கிங் ஸ்டிக்!
பாறை முகட்டிலிருந்து விழுந்திருக்கலாம். அவருக்கு உடனடியாக ஒரு நல்ல டாக்டரின் சேவை தேவை!
என்னை வற்புறுத்தாதே- நான் விடுமுறையில் இருக்கிறேன்!
பின்னர்-
அதோ கைத்தடி- இந்த வீட்டினுள் நாம் நுழைய வேண்டும் என்று தோன்றுகிறது எனக்கு!
சரி- உன்னிஷ்டம்!
உள் அறையில் படுத்திருக்கிறார். இத்தனை சீக்கிரத்தில் ஒரு டாக்டர் வந்து சேர்ந்திருப்பது அவருடைய அதிர்ஷ்டம் தான்!
ஏதோ எங்களாலான உதவியை செய்து விட்டுப் போகலாமே என்று வந்தோம்!
நோயாளிக்கு பூரண ஓய்வு தேவை- ரொம்ப பலவீனமாகிவிட்ட அறிகுறி தென்பட்டால் நெற்றியில் வினிகரை அழுந்த தேய்க்கணும்!
இவர் யாரென்று நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?
புரபஸர் ஆர்தர் டோனேவ பெரும் செல்வந்தர். இவரு டைய மாளிகை இங்கிருந் ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது!






புரபஸரை அவருடைய மாளிகைக்கு கொண்டு போய் சேர்த்து விடுவது நல்லதில்லையோ?
அது சுலபமான காரியமில்லை!
காரணம்-இன்றிரவை அவர் தாண்டமாட்டார் என்பது என்னுடைய கணிப்பு!
அப்படியா சேதி? உடனே நான் உயில் எழுதணும்- அதற்குத் தேவையான சக்தி இருக்குமா எனக்கு?
மிக்க நன்றி- இனி ஆக வேண்டியதை நான் கவனித்துக் கொள்கிறேன்!
அவருடைய நிலைமையை பார்த்தால் வருத்தமாகத்தான் இருக்கிறது- என்ன செய்வது?
ஆண்டவன் உங்களுக்கு துணை புரியட்டும்!
என்னுடைய- கடைசி ஆசையை- ஒரு வழியா எழுதி வச்சுட்டேன் ஆவ்- என் தலை- உஷ்ஷ்-
ஓ - விழித்துக் கொண்டு விட்டீர்களா- புரபஸர்-இப்போது சற்று தெம்பாக காணப்படுகிறீர்கள்!


அடக்கடவுளே - நான் சொல்லி வாய் மூடலே-மறுபடியும் நினைவு தப்பி விட்டதே! வினிகர் பயன்படக் கூடும் சீக்கிரம் எடுத்து தடவணும்,
டாக்டர் வாஸ்டனின் அறிவுரைப்படி வினிகரை நெற்றியில் தேய்த்தாள்.
என்னுடைய வீட்டில் உயிரை விட்டுடாதீங்க புரபஸர்!
சே- இவ்வளவு பதற்றம் கூடாது எனக்கு!
கார்க்கை தேடிக் கொண்டிருக்க இப்போது அவகாசமில்லே!
ஆனு உடனடியா மூடி வைக்காவிடில் வினிகர் ஆவியாகிப் போயிடும்! இதோ- இந்தக் காகிதத்தைக் கிழித்துச் சுருட்டி
அந்தோ பரிதாபம்! வினிகர் பாட்டிலின் மூடியாகிப் போனது புரபஸரின் இறுதி உயில்.
பாட்டிலே ஒரு வழியா மூடி வச்சுட்டேன்!
22


சற்று நேரம் கழித்து-
வாங்க! அவர் உள்ளே இருக்கிறார்!
அவரை தூக்கிட்டுப் போறதுக்கு பணம் யார் கொடுக்கிறதுங்கறதிலே குழப்பமில்லேயே?
இந்த காகித துண்டையாவது பத்திரமா எடுத்து வைக்க முடிந்ததே! இன்னொரு உயில் எழுத தெம்பில்லே எனக்கு!
அங்கே மாளிகையில் உங்களுக்குரிய கூலியைக் கொடுப்பார்கள்!
உயிரோடு கொண்டு போய் சேர்த்தால் கூலி பன்னிரெண்டு ஷில்லிங்- ஒரு வேளே வழியிலேயே உயிர் போயிடுச்சுன்னு ரெட்டிப்பு கூலி தரணும்!
ஏன் அப்படி?
இல்லேன்னு ஆவி அதை தப்பா புரிஞ்சுக்கிட்டு விடாம எங்களே துரத்துகிற அபாயம் உண்டுங்கிறதுதான் காரணம்!
அநியாயம்! நான் உயிரோடு மாளிகை சென்றடைய, ஆண்டவனே கருணை காட்டு!
வழியிலேயே நிலேமை மோசமாயிட்டா, இந்தாங்க இந்த வினிகரை நெற்றியிலே தேயுங்கள்!
கூலி சரியா கைக்கு வந்திட்டுதுன்னு, மிச்சத்தைத் திருப்பிப் பத்திரமா கொடுத்திடணும்!
சரி. கொடுங்க மேடம்!
23


இதற்கிடையே டோனுவனின் மாளிகையில்-
இவருக்கு என்ன ஆச்சு?
பாறை முகட்டிலிருந்து விழுந்திட்டார். நிலைமை படுமோசமா இருக்கு!
இவரை எங்கே படுக்க வைக்கணும்?
ஓ ஜானி- உன்னே நான் எவ்வளவு ஆழமா நேசிக்கிறேன் தெரியுமா?
சரி- சரி- மெள்ளப் பேசு! மிஸ்டர் டோனு வினின் காதில் இது விழுந்ததோ அடுத்த நிமிஷமே எனக்கு மானேஜர் பதவி போயிடும்!
பதருதீர்கள்! உல்லாசப் பயணம் போயிருக்கும் என்னுடைய அங்கிள் திரும்பி வந்ததும் நம் காதல் விவகாரத்தை அவரிடம் சொல்லிட லாம்னு இருக்கிறேன்.
நான்தான் உன் மனதை கெடுத்திட் டேன்னு சொல்லி அந்தக் கிழம் எனக்குகல்தா கொ டுத்து அனுப்பி விடப் போகிறது?
செத்திட்டாரா?
இன்னும் இல்லே- அதனுல் நீங்க 12 ஷில்லிங் கொடுத்தா போறும்! இந்தா வினிகர் பாட்டில்! நெற்றியிலே வினிகரைத் தேய்ச்சா கொஞ்சம் தெம்பு வரலாம்!
அங்கிள் என்னே விட்டுட்டுப் போயிடாதீங்க!
இது தான் அவருடைய மாளிகை-
அவரை ஜாக்கிரதையா தூக்கி உள்ளே கொண்டு போகணும்!
எலிஸபெத் உயில் எல்லாமே ஆர்தருக்கு-
ஆர்தரா? எந்த ஆர்தர்? எழெட்டுப் பேர் இருக்காங்களே- நம் குடும்பமே ஆர்தர் குடும்பம்தானே?
விபரம் எழுதியிருக்கு இதிலே ம்ம்-வினி-கர்-கர்-கார் க்!


அந்த வினிசரை இப்படி கொண்டாங்க சீக்கிரம்!
ஊஹூம்- இனி வினிகரால் எந்த பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை!
ஸாரி மிஸ் எங்களோட கூலி 12 ஷில்லிங்கை கொடுத்திங்கன்னா நாங்க புறப்பட்டிடுவோம்!
ஐயோ அங்கிள்! அதுசரி- கொஞ்சம் குறைச்சுக்கிட்டு நீங்க பத்து ஷில்லிங் வாங்கிக் கொள்ளக் கூடாதா?
சவ அடக்கம் நடந்து முடிந்த பிறகு·
மாளிகைக்கு இப்போது யார் எஜமானர் என்று தெளிவாகத் தெரியாததால் வேலைக்காரர்களிடம் பணிவு இல்லை!
வேலைக்காரன் ஸ்னிப்ஸ் நேற்று சொல்லிக் கொள்ளாமலே வராது இருந்துவிட்டான்! உயில் எங்கே இருக்கிறது என்று நாம் தேடிக் கண்டு பிடிக்காத வரை குழப்பம் தான்!
வக்கீல் மோரிஸன் விரைவில் வந்து சேருவார். அவர் விபரங்களை வெளியிடக் கூடும்!
அவர் என்னை வெளியேற்றி அனுப்பி விடக் கூடும். எனக்கு பணத்தின் மீது ஆசையில்லை. ஆனால் உங்களைவிட்டுப் பிரிந்தால் அந்த வேதனையை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது ஜானி
ஸ்னிப்ஸ்- யாரது?
மிஸ்டர் ஹென்றி மோரிஸன்· வக்கீல்!
குட் ஆஃப்டர் நூன்- ஜெண்டில்மேன்!


உங்களுடைய மன அமைதி கெட குறுக்கே வந்து விட்டதற்கு முதலில் மன்னிப்பு கோருகிறேன்!
அதற்கு அவசியமில்லை ஸார்! இதோ இவர் மிஸ்டர் ஜான் மாக்ளின்டோஷ்- இந்த மாளிகையின் மானேஜர்!
நான் இறந்துபோன ஆர்தர் டோனேவனின் குடும்ப வக்கீல்!
உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்!
நல்ல சேதி சொல்லப் போகிறாயோ- இல்லை வெடிகுண்டைத் தூக்கிப் போடப் போகிறாயோ- தெரியவில்லை!
வக்கீல் ஸார்-அங்கிளின் உயில் உங்கள் வசம்தான் இருக்கிறதா?
ஆமாம்! ஆனால் என் வசமுள்ளதை உயில் என்று சொல்ல முடியுமா சந்தேகம் தான்!
நாங்கள் அதை இங்கே தேடாத இடம் பாக்கியில்லை!
ஸ்னிப்ஸ் அதை என்னிடம் கொடுத்தான்!
மிஸ்டர் டோனேவ்னின் பாக்கட்டினுள் இருந்ததை கண்டுபிடித்து எடுத்திருக்கிறான் நேராக என்னிடம் கொண்டு வ்ந்து ஒப்படைத்து விட்டான்.
சொத்துக்களை எல்லாம் யார் பெயருக்கு ஸார் எழுதி வைத்திருக்கிறார்?
அறிந்து கொள்ள ஒரே துடிப்பாக இருக்கிறது எங்களுக்கு'


அவசரப்படாதீர்கள்- டோனுவனின் வாரிசு என்று உரிமை கொண்டாடுபவர்கள் இன்னும் சற்று நேரத்தில் இங்கே வந்து சேருவார்கள்!
அந்த பட்டியலில் இடம் பெற உரிமையுடைய இந்த பெண் டோனுவனின் அண்ணன் மகள். ஏற்கனவே இங்கே இருப்பதை மறந்து விட்டுப் பேசாதீர்கள் வக்கீல் ஸார்!
ஆனால் இவளுடைய பெயர் ஆர்தராக இருக்க முடியாதே!
ஜோக் அடிக்க இதுவல்ல நேரம்! இவர் பெயர் எலிஸபெத்- வக்கீல் ஸார்!
நான் ஜோக் அடிக்கவில்லை பட்டியலில் இவள் இடம் பெற முடியாது என்று உறுதியாகி விட்டது!
ஜானி- மோசம் போனோம்!
கலவரமடையாதே அன்பே- தைரிய- மாக இரு!
வக்கீல் ஸார்- ஆர்தர்கள் வந்து விட்டார்கள்!
எதையும் என்னிடம் வந்து சொல்லா- மல் நேராக வக்கீலிடம் பேசுகிறானே- என்ன திமிர்-
துரோகி!
சரி அவர்களை உள்ளே அனுப்பு!




ஹலோ பியர்ஸன் ஆர்தர், டோனேவன் ஆர்தர், கிளிங்டன் ஆர்தர்- எல்லோரும் வருக!
அங்கிள் ஆர்தரின் ஆன்மா சாந்தியடைவதாக!
இதற்கிடையே இலண்டனில்-
ஆறாவது ஆர்தரிடமிருந்து வந்திருக்கும் கடிதம் இது-படிக்கிறேன் கேள்! ''அங்கிள் என்னைத்தான் ஏகபோக வாரிசாக்கிவிட்டுப் போயிருப்பார்- அதனால் என் உயிருக்கு ஆபத்து வருமோ என்று அஞ்சுகிறேன்'' முதல் ஐந்து கடிதங்களின் பாணியிலேயே இதுவும் இருக்கிறதல்லவா?
ஒவ்வொருத்தனும் மற்றவர்கள் தன்னைத் தீர்த்துக் கட்டிவிட முயற்சிக்கக் கூடும் என்று பயப்படுகிறான்.
ஏழாவது ஆர்தர் கிளிங்டனும் தான் தான் வாரிசு என்றும் வாரிசு உரிமைக்கு போட்டியிடும் மற்றவர்கள் தன்னை கொன்று விட முயற்சிக்கக் கூடும் என்று எழுதியிருக்கிறான். மற்ற கடிதங்களில் உள்ளது போலவே- ''நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று முடித்திருக்கிறான்!
சரி கிளம்புவோமா?
இந்த விவகாரத்தில் உன் பங்கும் இருக்கிறது வாஸ்டன்! ஸ்காட்டிஷ் மலைப் பகுதியில் விழுந்து படுகாயமுற்றவருக்கு வைத்தியம் பார்த்தவன் அல்லவா நீ?
இந்தக் கிண்டல்தானே வேண்டாம்கிறது!
நீ மட்டும் அவரைக் காப்பாற்றியிருந்தால் இப்போது இந்தத் தொல்லை நமக்கு வந்திருக்காதில்லையா?
டாக்டரும் ஒரு மனிதன்தான் என்பதை மறந்து விட்டுப் பேசாதே!


அப்போது செய்யத் தவறியதை சரி செய்ய உனக்கு இன்னொரு வாய்ப்பாக முக்கிய பணி ஒன்றை ஒப்படைக்கப் போகிறேன்!
சொல்லித் தொலை!
நீ ஒரு நல்ல டாக்டரோ இல்லையோ நல்ல நடிகன் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது எனக்கு!
?!
அங்கே-
கவனமாகக் கேளுங்கள்- மிஸ்டர் டோனேவன் ஆர்தர் எழுதி வைத்துச் சென்றதை இப்போது படிக்கப் போகிறேன்!
உயிலில் என்ன எழுதியிருக்கிறார் என்று அறிய துடித்துக் கொண்டிருக்கிறோம்- சீக்கிரம் படியுங்கள்!
வலப்பக்க மூலையை காணவில்லை - இருக்கிறதைப் படிக்கிறேன் - "..டைசி உயில்" அதாவது "என்னுடைய கடைசி உயில்" என்று இருந்திருக்கும் சரிதானா?
மேலே படியுங்கள். பெயரை தெரிந்து கொள்ள வேண்டும் சீக்கிரம்!
என்னுடைய மாளிகையில் உயில் படிக்கப்படுகிறது. ஆனால் எனக்கு அழைப்பில்லை. இப்படி இரகசியமாக ஒட்டுக் கேட்க வேண்டியிருக்கிறது!
உஷ்ஷ்! வக்கீல் மேலே படிக்கிறார்- கேள்!
"...மு சுயவுணர்வோடு இதை...- இந்த இடத்தில் ஒரு துணுக்கை காணவில்லை. அடுத்து ..ளிகை, பாங்க் ரொக்கம்... கம்பெனி பங்குகள்... அனைத்தையும்...
சீக்கிரம் மேலே படியுங்கள். யாருடைய பெயர் வருகிறது!




...ஆர்தருக்கு கொடுக்கிறேன்!
ஓ- அப்படின்னா நான் தான்!
ஏன்? அது நானாக இருக்கக் கூடும்!
ஐயோ- என்னைக் கொல்லப் பார்க்கிறான்?
தயவு செய்து யாரும் உணர்ச்சி வசப்படாதீர்கள். துரதிர்ஷ்டவசமாக உயிலிலிருந்து அந்த ஆர்தர் உங்களில் யார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை! ஆனால் கண்டுபிடித்து விட முடியும் என்றே தோன்றுகிறது. மேலே கேளுங்கள்: "எனவே, என்னருமை ஆர்தரின் மரணம் வரை பராமரிப்பாளராக இருக்கிற நபரிடம் பணம் ஒப்படைக்கப்பட வேண்டும்!
பராமரிப்பாளர்? அப்படின்னா உயிலில் சொல்லப்பட்டிருக்கிற ஆர்தர் ஒரு மந்த புத்திக்காரனாக இருக்க வேண்டும்!
" ஆர்தர் 1903-ம் ஆண்டு ஜூலை 3-ந் தேதி நள்ளிரவு வரை உயிரோடு இருந்து விட்டால் மீதமிருக்கும் சொத்துக்கள் அனைத்தும் பராமரிப்பாளரை சேர வேண்டும், ஆர்தர் அதற்கு முன் செத்துப் போனால் என் சொத்துக்கள் அனைத்தும் தர்ம ஸ்தாபனங்களுக்கு போய்ச் சேர வேண்டும்!
நம்பும்படியாக இல்லையே!
எனக்கு பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது!
லூசுத்தனமாக இருக்கிறது!
வக்கீல் ஸார்- நாங்கள் இதை ஏற்றுக் கொள்வதற்கில்லை!
ஸாரி பிரமுகர்களே- இதுதான் மிஸ்டர் டோனேவன் எழுதிச் சென்ற உயிலின் வாசகம்!
சொந்தக்காரர்களை மோசம் பண்ணி விட்டார்!


இதுதான் சரியான தருணம்- மந்தபுத்திக்காரனுட்டம் நடிக்க வேண்டியது தான்!
பலூன்-ஹைய்யா-பலூன்- இதோ பிடிச்சுட்டேனே ஹீ-ஹீ-ஹீ !
ஓ கிளிங்டன் ஆர்தருக்கு என்ன சித்தசுவாதீனமில்லையா?
பப்!
என்னருமை உறவினர்களே- நானென்றும் பைத்தியமில்லை- நாட்டு பிரதமராகி விட்டால் பிறகு நான் உளற மாட்டேன். ஹி ஹி-ஹி!
சந்தேகமேயில்லை- இது கேஸ் தான்!
பைத்தியக்கார விடுதியில் உடனடியாக உன்னை அட்மிட் செய்தாக வேண்டும் ஆனால் செலவை யார் ஏற்றுக்கொள்வது என்பதில்தான் பிரச்னை !
அமைதியாக இருங்கள்- இல்லையேல் வன்முறை தலைதூக்கி விடக் கூடும் நம்மிடையே!
யாரங்கே- இவரைக் கொண்டு போய் உடனே தூக்கில் போடுங்கள் இது என் உத்தரவு!
உதவி- என்னைக் கொல்லப் பார்க்கிறார்கள்!
ஓ-துஷ்டனைக் கொல்ல ஆண்டவன் புலியை ஏவிவிட்டிருக்கிறாரா-பலே பேஷ் பேஷ்!
உன் அங்கிள் ஒரு பென்னிகூட உனக்கு விட்டுச் செல்லவில்லை!
காணாமல் போன உயிலின் துண்டுப் பகுதியில் என்ன எழுதியிருக்கிறதோ யாருக்குத் தெரியும்?
32


அந்த ஆள் சரியான கிறுக்கனாக இருப்பான் போலிருக்கிறது!
யாரது! விலகுங்கள்- நான் பார்க்கிறேன்!
ஆகா- இந்த பன்றி வறுவல் படு பிரமாதம்!
அந்த மெழுகுவர்த்தி ஒன்று- ஐந்து பென்னி!
ஓ-அவனுடைய அப்பன் வீட்டுதுன்னு நினைச்சானா?
அப்பொழுது-
ஒரு ஆள் வந்திருக்கிறார்- இன்றிரவு இங்கே தங்க அனுமதி கோருகிறார்- ஸார்!
என்ன? யாரது? ஓ- வந்து- சரி- சரி- அவனுக்கு ஒரு அறையை தயார் செய்து கொடு முதலில் இங்கிருந்து போய்த் தொலை!
வாங்க ஸார் உள்ளே- மானேஜர் சரின்னுட்டார்!
கலைஞர்களுக்கு நீங்கள் காட்டும் பேராதரவு மெய்சிலிர்க்க வைக்கிறது! நன்றி நண்பரே!
அது வேறு யாருமல்ல- நமது கதாநாயகர்கள்தான்.
ஆனால் இங்கே ஒரு படுக்கை மட்டும்தானே இருக்கிறது!
ஏன்- போதாதா? குரங்குக்கு கட்டில், மெத்தை கேட்கிறதா என்ன?
33



அடுத்து என்ன செய்யப் போகிறோம் ஷோம்ஸ்?
நீ ஓய்வு எடு! நான்போய் நிலவரத்தை ஆராய்ந்துவிட்டு வருகிறேன்!
இரயிலே பிடிக்க முடிந்தால் இன்றே நான் ஊர் திரும்பிவிட தீர்மானித்துள்ளேன்!
எங்களுடைய விருந்தாளியாக தங்கி-யிருந்து எங்களை பெருமைப்படுத்த வேண்டும்!
எங்களுடைய ஓரிரு சந்தேகங்களுக்கு உங்களிடமிருந்து விளக்கம் எதிர் பார்க்கிறோம்!
கிளிங்டன் ஆர்தருக்கு பைத்தியம் பிடித்து விட்டதால் பட்டியலிலிருந்து அவனுடைய பெயரை நீக்கிவிடலாமில்லையா?
அப்படியில்லை! அவனுக்கு உடனடித் தேவை ஒரு நல்ல பராமரிப்பாளர் உயிலில் தெளிவாக சொல்லப் பட்டிருக்கிறது
என்னது? பப்ப ரா-மரிப்பாளர் ஆங்- பராமரிப்பாளர்!
!
!
!
பராமரிப்பாளர் தேவைப்படுகிற அளவுக்கு பைத்தியம் முற்றிப் போய்விடவில்லை கிளிங்டனுக்கு!





இதோ இருக்கிறார்கள் மொத்தப்பேர்வழிகளும்!
ஆகவே, ஒரு அரைக்கிறுக்குத் தான் வாரிசாக முடியும் என்பது தெளிவு!
பராமரிப்பாளர் பற்றி உயிலில் தெளிவாக உள்ளது!
கிளிங்டனுக்கு பைத்தியமில்லை! விஷயத்தை சட்டென்று புரிந்து கொண்டு நம்மை முந்திக் கொண்டு விட்டான் அந்த சமர்த்தன்!
திடீரென்று-
ஒவ்வ்- அ-அதோ அங்கே ஒரு குரங்கு!
சே- சற்று கவனக் குறைவாக இருந்து விட்டேன். இனியும் இங்கே நிற்கக் கூடாது!
நீங்களும் பைத்தியம் போல் நடிக்க முயற்சிக்கிறீர்களா?
எடுபடாது மிஸ்டர் பியர்தன் ஆர்தர்!
ஐயோ- சத்தியமாக சொல்றேன்- நிஜ-மாகவே நான் ஒரு குரங்கை பார்த்-தேன்- நான் பொய் சொல்லவில்லை என்று நிரூபித்துக் காட்டுகிறேன் பாருங்கள்!
இதோ- இங்கே தான் அது இருக்கக்கூடும்!
இருங்க நானும் வரேன்!
நானும் கூட வரு-கிறேன்!


இங்கே ஒளிந்து கொண்டால் யார் கண்ணிலும் படமாட்-டேன்!
காணேமே- இங்கே இந்த இடத்தில்தான் உட்கார்ந்து கொண்டிருந்தது!
இதை நாங்க நம்ப வேண்டு-மாக்கும்?
இன்னும் எங்கே போறீங்க- குரங்கு இருந்தால் அல்லவா அகப்படுவதற்கு!
பொய் சொன்னாலும் கொஞ்சம் பொருத்தமா சொல்லணும்?
ஹே-! என்ன இது?
?
பார்த்து விடுவோம்!
?
வாலே விடுடா-முட்டாள்!
ஆ-ஆ-ஹாய்ய்ய்!




உதவிவிவி-என்ன ஆச்சு அவனுக்கு!
புதுசா ஏதோ தந்திரம் பண்ண நினைக்கிறீங்க?
ஐயாரவ்!
என்ன நடந்தது?
வாலே விடுடா-முட்டாள்!
நாடகத்தை நீயும் ஆரம்பித்து விட்டாயா?
பித்தனாக நாடகமாடத் துணிந்து விட்டாயா? வெட்கக் கேடு!
ஆனால் - அந்தக் குரங்கு ரொம்ப தெளிவா என்கிட்டே சொன்னதே "வாலே விடுடா முட்டாள்"னு!
பணம் எப்படியெல்லாம் மனிதனை ஆட்டிப்படைக்கிறதுங்கிறதுக்கு நீ ஒரு சரியான உதாரணமாகி விட்டாய்!
மேலே ஏதோ கலாட்டா!
சண்டையோ?
வாருங்கள் போய் பார்ப்போம்!
அவர்களும் பைத்தியங்களாக நடிக்கத் தொடங்கி விட்டால் என் யுக்தி தோற்றுப் போய் விடக் கூடும்!
பைத்தியக்கார விடுதிக்குள் இருக்கிற பிரமை ஏற்படுகிறது எனக்கு!
என்ன நடந்திருக்கும்?
எனக்கு எப்படி தெரியும். போய்த்தான் தெரிந்து கொள்ளணும்!




நம் உறவினர் கல்லிகன் உளற ஆரம்பித்து விட்டார்- ஒரு குரங்கு மனிதக் குரலில் பேசியதைக் கேட்டாராம்!
நான் சத்தியம் பண்ணத் தயார்!
உன்னைச் சொல்லிக் குற்றமில்லை!
ஆனாலும் இப்படியா?
இல்லை- விழித்துக் கொண்டு தானிருக்கிறேன்- பின்னே எப்படி குரங்கு?
உதவி- எனக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என்னவோ?
இன்னொருத்தர்- வாருங்கள் கீழே போய் பார்ப்போம்!
விபரீதமாக எதுவும் நடந்து விட்டிருக்கக் கூடாது!
நான் என்னுடைய அறைக்கு ஓடிப் போயிடணும்!
போன காரியம் என்ன ஆச்சு?
பாதி பழம்! முதலில் என்னுடைய சுய உருவத்திற்கு திரும்பிக் கொண்டு பிறகு விவரிக்கிறேன் நடந்ததை!
ஆக, பேராசை காரணமாக அவனவன் தன்னை பைத்தியமாக்கிக் கொள்கிறனுக்கும்- பரிதாபம்! அது சரி- கொலைகாரன் யார்?
இன்னும் கொலை நடந்துவிடவில்லை. ஆனால் எந்த வினாடியிலும் யார் வேண்டுமானாலும் கொலை செய்யக் கூடும்!
அன்றிரவு-ஜானியும் எலிஸபெத்தும் தங்களுடைய நிலைமையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர்-
நான் உடனே மூட்டையைக் கட்டிக் கொண்டு இங்கிருந்து வெளியேறி விடுவதுதான் நல்லது!
அவசியமில்லை! இன்னமும் நான்தான் இங்கே மேனேஜர் - நீ என் விருந்தாளியாக தொடர்ந்து தங்கலாம்!
ஷோம்ஸுக்கும் வால்டனுக்கும் அன்றிரவு தூக்கம் வர மறுத்தது-
எ-என்ன சப்தம் அது?
அந்தப் பூனை நாசமாகப் போக!
அந்த மாளிகையில் விபரீதம் முளைவிடத் தொடங்கியது-
மறுநாள் காலை-
இன்னமும் நாம் அனைவரும் உயிரோடிருப்பது அதிசயம் தான். அப்பப்பா- தலையை ஏன் தான் இப்படி வலிக்கிறதோ?
பயங்கரமான இரவு உடம்பெல்லாம் ஒரே வலி!
நாம் உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்!



சரி- மீண்டும் காரியத்தில் இறங்கச் செல்கிறேன்- வேஷப் பெட்டி இனி எப்போதும் என் கைவசம் இருப்பது நல்லது!
ஆல்ரைட்- நான் உன்னையும் கவனித்துக் கொள்கிறேன்!
வெரிகுட் வக்கீல் இன்னமும் தூங்கிக்கொண்டிருக்கிறார்!
அவர் சீக்கிரத்தில் விழித்துக் கொண்டு விடலாகாது! எனவே-
நான் இனி யாரையும் கலவரப் படுத்தாமல் உள்ளே நுழைய முடியும்!
பேச்சு சப்தம் கேட்கிறது! வாரிசு உரிமை கொண்டாடும் பட்டாளம் தயாராக காத்துக் கொண்டிருக் கிறது போலும்!
நாம் நமக்குள் பேசி ஒரு ஒப்பந்தத்திற்கு வருவோம்- இல்லையேல் நமக்கு ஒரு சல்லி கூட கிடைக்காமல் போகலாம்!
எனக்கும் அதே எண்ணம்தான். ஆனால் வக்கீல் இங்கே இருக்கிறாரே!
வக்கீலை இல்லை என்று பண்ணி விடுவோம்!
அருமையான யோசனை!





வாருங்கள்- அவ்ருடைய அறைக்குப் போவோம்! இன்னமும் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்?
இது நிஜ வக்கீல் அல்ல! அவரைப்போன்ற வேஷத்திலுள்ள ஷோம்ஸ்-
நேற்றையைவிட இன்று அவர்களுக்குள் ஒற்றுமை தீவிரமாகிவிட்டமாதிரி தோன்றுகிறது!
-ஸ்-ஸ்-ஸ்!
ஆவ்- செத்தேன்!
மியாவ்!
ஹே - என்ன ஆச்சு?
யாரோ படிக்கட்டில் விழுந்து விட்டார்கள்!
தொப்!
யாரோட வேலை இது?
வாங்க- தப்பி ஓடிப் போயிடலாம்!
வேறு யாருமில்லை- அது வக்கீல் மோரிஸன்!


என்ன விவகாரம் இங்கே?
வந்து நீ-நீங் க-ம்ம் உங்களுக்கு ம் அதை எப்படி சொல்றது?
நான் எதையுமே சொல்லவில்லை வக்கீல் ஸார்!
சும்சும் சும் மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன்- தப்பா எடுத்துக்கிடாதீங்க!
பரவாயில்லை! அமைதியாக உட்காருங்கள். எல்லோருக்கும் குடிக்க ஏதாவது கொண்டு வரச் சொல்கிறேன்!
நல்ல யோசனை- எங்களுக்கு அவசியம் தேவைதான் இப்போது!
என்ன ஸார்- என்ன வேண்டும்- சொல்லுங்க!
உன்னைத்தான் தேடி வந்தான் ஸ்னிப்ஸ்-எல்லோருக்கும் பருக ஏதாவது எடுத்து வா!
இதோ-நொடியில்!
மற்றவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்க நான் உருமாறிக் கொள்ள வேண்டியது அவசியம்!
குரங்கு உருவத்திலிருந்ததை விட இது கொஞ்சம் அலட்டல் இல்லாதது!




எலிஸபெத்!
யாரோ வருகிறார்கள் இங்கே!
கைப்பையை மறைத்து வைத்து விட்டு துடைப்பமாக நிற்க வேண்டும் நான்!
ஓ-எலிஸபெத்-உன்னை தனியாக சந்திப்பது பெரும்பாடாக இருக்கிறது! உன்னிடம் காட்ட அருமையானதொன்றை கொண்டு வந்திருக்கிறேன்!
என்ன அது-சீக்கிரம் காட்டுங்களேன் -ப்ளீஸ்!
உயிலை நைஸாக எடுத்து வந்துவிட்டேன் - இனி யாரும் சொத்துக்கு உரிமை கொண்டாட முடியாது!
என் பொருட்டுத்தானே இதைச் செய்தீர்கள்? அதுசரி- இது எப்படி சாத்தியமாயிற்று உங்களுக்கு?
வக்கீல் தூங்கிக் கொண்டிருக்கையில் இரகசியமாக அவருடைய பையிலிருந்து எடுத்து வந்துவிட்டேன்!
ஆனாலும் உங்களுக்கு துணிச்ச அதிகம்தான்!
ஹூம்-! விஷயம் சுவாரஸ்யமாக-அதே சமயம் சிக்கலாக உருவாகி வருகிறது!
ஸாரி மானேஜர்! எங்களுக்கு பணம் கொண்டுவர ஏற்பாடாகியிருக்கிறதா இல்லையா என்று உங்களுக்குத் தெரியுமா?
அதை சமையலறையில் போய் கேட்டுத் தொலைக்காமல் ஏன் இங்கே வந்து என் உயிரை எடுக்கிறீர்?




ஏய்ய்- என்ன இது? முதல் தர விஸ்கியை ஊற்றுகிறாய்- அவசியம்தானா?
பேசாமலிரு ஜெனிபர்- நம்முடைய எதிர் கால எஜமானர் யாரென்று இன்னமும் தெரியாத நிலையில் இது தான் விவேகமானது!
ஒரே ரக டம்ளர்கள் ஆறுக்கு மேல் கிடை-யாது. எனவே வேறு ஒன்றை எனக்கு வைத்துக் கொள்வேன்!
இறந்து போன எஜமானர் எதிலும் சிக்-கனம் பார்ப்பார். நீயானால் இப்படி-
உன் பேரு என்ன · ஸ்னிப்ஸா? அங்கே போய் கேளு இன்னும் என்னவோ வேண்டும் என்று சொன்னார்கள்!
இதோ போகிறேன் ஸார்!
மேடம் · போய் கொஞ்சம் ஐஸ் எடுத்து வருகிறீர்களா?
ஓ! ஆனால் எடுத்து வர கொஞ்சம் தாமதமாகும். நீங்கள் சற்று பொறுத்துக் கொள்ள வேண்டும்!
ஒரே கல்லில் ஆறு மாங்காய்களை வீழ்த்திடலாம்! ஆறு கிளாஸ்களில் விஷத்தைக் கலந்து விட்டேன்! இந்த கிளாஸ் எனக்கு? சொந்தக்கார மடையன்கள் எல்லாம் க்ளோஸ்!
துடைப்பம் தீவிரமாகக் கவனித்துக் கொண்டிருந்தது-






ஐஸ் வந்து சேரும் வரை நான் காத்திருக்க முடியாது!
இந்த துடைப்பம் எப்படி திடீரென்று இங்கே வந்து முளைத்தது?
யாராவது இங்கே கொண்டு வந்து வைத்துச் சென்றிருக்கக் கூடும்!
கொஞ்சம் தண்ணீர் குடித்து விட்டு வருகிறேன்!
ம்ம்- தாராளமாக!
?!
?!?
அருமையான சந்தர்ப்பம்- அக்கம் பக்கத்தில் யாருமே இல்லை!
மற்றவர்களை ஒழித்துக் கட்டப் போகிறேன் · ஓசைப்படாமல்!
கொஞ்சம்விஷத்தை மற்ற கிளாஸ்களில் கலக்க வேண்டியதுதான்!
இது எனக்கு ! அடையாளம் கண்டு கொள்வதில் சிரமமே இராது!
சமையலறையை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். யாராவது எதிர்ப்பட்டால் கழிவறையை தேடிக் கொண்டிருப்ப-தாக சமாளித்துக் கொள்வேன்!


அங்கே-
பானம் ஏன் வந்து சேர வில்லை இன்னமும்!
ஏழு பேர்களும் ஒரே யுக்தியில் இறங்கி விட்டார்கள். அடுத்து என்ன நடக்கும்?
விபரீதம் விளைந்து விடாமல் முன்னெச்சரிக்கையாக நான் ஏதாவது செய்ய வேண்டும்!
மீண்டும் வக்கீல் வேஷத்திற்கு மாறினர் ஷோம்ஸ்-
இவ்வளவு நேரமும் எங்கே போயிருந்தீர்கள் வக்கீல் ஸார்!
காலையில் வாக்கிங் போவது என்னுடைய அன்றாட வழக்கங்களில் ஒன்று!
இந்த பிரமுகர்களுக்கு பொறுமை கொஞ்சமும் கிடையாது போலும்- நான் ஐஸ் எடுத்து வருவதற்குள் கிளம்பிச் சென்று விட்டாரே!
சரி- மேலும் தாமதப்படுத்தாமல் சீக்கிரம் ஐஸை போடு ஜெனிபர்!
யார் வாரிசாக அறிவிக்கப்பட்டாலும், உயிலை நான்தான் தேடி எடுத்துக் கொடுத்தேன் என்பதை நினைவில் இருத்தி கணிசமான அன்ட ரக் கூடும்!




அதோ பானம் வந்து விட்டது! அந்த ஏழாவது டம்ளரை நான் எடுத்துக் கொண்டு விட வேண்டும்!
இன்னும் ஓரிரு நிமிட அவகாசத்திற்குப் பின் நான் ஒருவன் மட்டுமே மிஞ்சுவேன்!
ஹா! அதிர்ஷ்டத்தின் பார்வை என் மீது முழுவதுமாக விழப் போகிறது!
ஆண்டவனே- யாரும் என்னை முந்திக் கொண்டு அந்த டம்ளரை எடுத்துக்கொண்டு விடலாகாது!
மரணத்தின் நிழல் தங்கள் மீது படிகிற சமாச்சாரம் இங்கே யாருக்குமே தெரியாது!
விறுவிறுப்பான கட்டம் வந்து விட்டது!
சரியான டம்ளரை எடுப்பதில் நான் முந்திக் கொண்டுவிட வேண்டும்!
விடு- அதுஎனக்கு வேண்டும்!
விடு என்னை- எனக்கு அந்த டம்ளர் தான் வேண்டும்!
பிடுங்காதே- நீ வேறொன்றை எடுத்துக்கொள்ளேன்!
யாருமே என்னைக் கவனிக்க வில்லை. இதுதான் சரியான தருணம்!
கொலைகாரப் பாவிகள்!


சற்று அமைதியாக இருங்கள். உறவினர்களே! இங்கே ஏதோ குளறுபடி நடந்துவிட்டிருக்கிறது!
நாசமாகப் போக! நம் எல்லோருக்கும் ஒரே மாதிரி தந்திரம் தோன்றியிருக்கிறது!
எட்டு ஷில்லிங் கொடுத்து வாங்கினேன் - வீணாகிப் போச்சு விஷம்
மலிவான சரக்காக இருக்கக் கூடும். நீ போட்ட முதலீடு வீணாகிவிடாமலிருக்க பானத்தை வக்கீல் ஸாருக்கு கொடுத்து பார்!
ம்ம்!
நல்ல யோசனே தான்!
வக்கீல் ஸார்- நீங்- ஹே- என்ன அது?
ஓ- மறுபடியுமா?
அதோ குரங்கு ஓடுகிறது!
ஆமாம் எங்கேயிருந்து வந்தது இந்தச் சனியன்!
குரங்காட்டி ஒருத்தனுக்கு இங்கே தங்கிச் செல்ல இடம் கொடுத்தோமே- மறந்து விட்டீர்களா?
ஆமாம்- அப்படின்னு சரிதான்!
சரியா- அதெப்படி? இன்னும் வாரிசு யார் என்று தீர்மானிக்கவில்லையே?
அதுசரி- வக்கீல் எங்கே? திடீரென்று மாயமாய் மறைந்து விட்டாரே!
ரொம்ப பிஸியோ- ரொம்ப நேரமா உன்னே காணவில்லையே?
பேசிக் கொண்டிருக்க நேரமில்லே! புறப்படு நாம் துரிதமாக செயல் பட வேண்டும்!




ஓடி வா- உனக்கு ஒன்று காண்பிக்கிறேன்!
அது என்ன என்று இங்கேயே நீ சொல்லக் கூடாதா?
வக்கீல் தூங்கிக் கொண்டிருந்த அறைக்கு வந்தனர்.
கதவை தட்டுவது அர்த்தமற்றது என்பது என் கருத்து!
ஏன் - உள்ளே யாருமில்லேயா?
இவரைப் பரிசோதித்துப் பார்த்து விட்டுச் சொல்!
முகம் வெளுத்துப் போயிருக்கிறதே- நாடித் துடிப்பை சோதிக்கவேண்டும்!
துடிப்பே இல்லேயே- கை 'ஜில்'லென்று இருக்கிறது- பிணத்தினுடையதுபோல்! இதயத்தை ஆராய வேண்டும்!
ஏன் அப்படி அலறுகிறாய் வாஸ்டன்!
ஆங்!
கொலே செய்யப்பட்டிருக்கிறார்!
அதுவும்- பலமுறை!


இல்லே வாஸ்டன்- இங்கேயே படுக்கை யில் கொலே செய்யப்பட்டிருக்கிருர்!
அப்படியில்லே வாஸ்டன்! ஏழு நபர்கள் தனித்தனியாக வந்து இரகசியமாக கொன்றிருக் கிருர்கள்-இவரை!
கொலேயாளிகள் சரியான கஞ்சர்கள்! தங்களுக்கு உடைமையர்கப் போகிற போர்வை வீணுகிப் போவதை விரும் பவில்லே! எனவே ஒவ்வொருவனும் நை- ஸாக உள்ளேவந்து போர்வையை அகற்றி விட்டு, வக்கீலின் நெஞ்சில் கத்தியை பாய்ச்சிவிட்டு, பின்னர் மீண்டும் உடலே போர்வை யால் மூடிப்போட்டு விட்டு போயிருக் கிருன்!
ஏழு கத்திக் குத்துகள்! போட்டியாளர்- கள் ஏழு பேர- ம்ம்- புரிகிறது!
அவசரப்படாதே! எலிஸபெத்தையும், மானேஜர் ஜானியையும் மறந்து விடா தே! அவளுடைய கடைக்கண் பார்- வைக்காக அவன் எதையும் செய்யத் தயங்க மாட்டான்!
நான் போகிறேன்! நீ இங்கே இருந்து மரணத்திற்கான உண்மைக் காரணத்தை கண்டறிய முயற்சி செய்!
காரணம் தெரிந்து விட்டதே! ஆனுலும் நீ சொன்னபடியே செய்கிறேன். நீ போ!
அதெப்படி பின்னுல் வந்த ஆறு பேர்வழி- களும் ஏற்கனவே வக்கீல் பிணமாகிக் கிடப்பதைக் கண்டு கொள்ளத் தவறினுர்கள்?
இருட்டில் நடந்திருக்கிறது அத்தனேயும்! சரியாகக் கொலே செய்தோமா என்ற சந்தேகம் எல்லோருக்கும் உறுத்தியிருக்க வேண்டும். அதனுல்தான் காலேயில் வக் கீல் வேஷத்தில் என்னேப்பார்த்த வுடன் எல்லோ- ரும் திகைத்துப் போய்விட்டனர்!




யார் மீது உனக்கு சந்தேகம்?
வக்கீலிடமிருந்த உயில் இப்போது ஜானியின் வசத்தில் இருக்கிறது!
என்ன இது நடுப்பகலில் ஊற்றிக் கொண்டு விட்டாயா-
ஏனிந்த சந்தேகம் வந்தது உனக்கு?
நீ மட்டும் தனியாக ஏதோ பேசிக் கொண்டு நிற்கிருயே?
உனக்கு உணவும், தங்க இடமும் இல- வசமாக கொடுக்க முடியாது- எனவே, உடனே கீழே போய் அங்கிருக்கும் பிர முகர்களுக்கு ஏதாவது வித்தைகாட்டு!
இதோ- வாத்தியத்தை எடுத்துக் கொண்டு கிளம்பறேன்!
ம்ம்- சீக்கிரம் போய் ஆரம்பி!
உங்களுக்கு ஒரு பொழுதுபோக்காக இதை ஏற்பாடு செய்திருக்கிறேன் பிரமுகர்களே!
ஓ- குரங்கு!
ஈஈக்-இங்கேயும் வந்துவிட்டதா? மனிதக் குரலில் பேசுகிறகுரங்கு இதுதான்!
உன் பித்தலாட்டம் இனியும் இங்கே செல்லுபடியாகாது சைத்தானே!



அன்பார்ந்த கனவான்களே- பிரமாதமாக பயிற்சியளிக்கப்பட்ட, மதி நுட்பம் வாய்ந்த குரங்கின் சாகஸத்தை இப்போது இங்கே நீங்கள் கண்டுகளிக்கப் போகிறீர்கள்?
ம்ம்- ஆரம்பி!
இங்கே இருப்பது ஆபத்து!
குரங்கு வயலின் வாசிக்கும் அற்புதத்தை காணப் போகிறீர்கள்-முதலில்!
ஐயோ - காப்பாற்றுங்கள்!
என்ன விவகாரம் அங்கே?
வக்கீல் கொலையுண்டு கிடக்கும் அறையிலிருந்து வந்தது அந்த ஓலம்!
ஷோம்ஸ் - நிதானம் வேண்டும் எதிலும்!
ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறது. வாருங்கள்- போய் பார்ப்போம்!
கதவு திறந்து கிடக்கிறதே!
அசம்பாவிதமாக எதுவும் நிகழ்ந்து விட்டிருக்கக் கூடாது!



ஹே மிஸ்- விழித்துக் கொள்! என்ன நடந்தது இங்கே?
பயங்கரம்! ஜானி வக்கீலை கொன்று விட்டார்!
உனக்கு அது எப்படித் தெரியும்!
உயிலை இவரிடமிருந்து எடுத்து வந்துவிட்டார். திரும்ப கொடுக்க இங்கே வந்தேன்!
ஆவ்வ்- குரங்கு!
அட- மறுபடியம் மயக்கம் போட்டு விட்டதே! ம்ம்- இந்த உயில்? காணாமல் போன துண்டு எங்கே இருக்கும்?
ஹே- என்ன அது?
சற்றுப் பொறுங்கள்- என் பையிலிருந்து ஒரு பென்னி விழுந்து விட்டது!
ஆமாம்- அதை முதலில் தேடிக் கண்டுபிடிக்கணும்!
எங்கேயும் காணோமே!
மாயமாக மறைந்து விட்டதே!
பென்னி என்றாலும் அதுவும் பணம் தானே- அலட்சியம் செய்யக்கூடாது!


யாரோ அங்கே அபயக் குரல் எழுப்பி-னார்கள். உடனே போய் என்னவென்று அறிய வேண்டியது அவசியம்!
ஆனால் என்னுடைய பென்னி?
அதை பிறகு தேடி எடுப்போம்! அது விழுந்த இடத்தை சரியாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்!
என்ன இழவு இது-குழப்புகிறதே!
ஏன் அவர் அங்கே படுத்துக் கிடப்பதில் என்ன தப்பு?
கொஞ்ச நேரத்திற்கு முன் நடமாடினரே! எப்படி?
ஏழு கத்திக் குத்துகள்! ஒருவருக்குமே 'ஒரிஜினலாக' எதுவும் செய்ய முடியவில்லை!
உளறாதே! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது!



வக்கீல் இன்று பகலில் நடமாடியதை நாம் அனைவருமே பார்த்திருக்கிறோம்!
எனவே, நம்மில் யாருமே இவரை கொல்லவில்லை. ஆனால் இந்தப் பெண் கொலையை செய்து விட்டு பிறகு விளைவை எண்ணி மிரட்சியடைந்ததால் மயக்கம் போட்டு வீழ்ந்து விட்டாள் என்பதுதான் சரியான கணிப்பாக இருக்க முடியும்!
?!
அபார மூளை உங்களுக்கு!
என் பாராட்-டுக்கள்!
இந்த முடிவை ஏற்றுக் கொள்வதுதான் நம் அனைவருக்குமே நல்லது!
இதை போலீஸுக்கு உடனே தெரிவித்தாக வேண்டும்!
டெலிபோன்-எங்கே இருக்கிறது?
சீக்கிரம்-ஓடு!
குற்றவாளி எழுந்து தப்பியோடி விடாமல் நான் இங்கே காவல் நிற்கிறேன்!
மற்றவர்கள் அகன்ற பிறகு-
குற்றவுணர்வினால் இவள் தற்கொலை செய்துகொண்டதாக செட்-அப் பண்ணிவிட்டால் யாருக்குமே சந்தேகிக்கத் தோன்றாது!
தற்கொலை செய்து கொள்ள கத்தியால் கையிலுள்ள இரத்தக் குழாயை வெட்டுவதுதான் இங்கே பெண்கள் வழக்கமாக கடைப் பிடிக்கும் வழிமுறை!
நான் உடனே விரைந்து செயல்பட வேண்டும்!


ஆஆஆ- உதவி!
ஐயோ!
இந்தப் பயலுக்கு சரியான பாடம் கற்பிக்கிறேன் பார்!
ஐயையோ- என்ன அது?
பயங்கரம்! பிணம் எழுந்து நடந்து வருகிறது. ஆவ்வ்!
ஈஈஈ!
ஏன் இப்படி அலறியடித்துக் கொண்டு ஓடி வருகிறீர்கள்?
போலீஸ் இன்னும் சற்று நேரத்தில் வந்து விடும்!
ஹே- புயலாய் ஓடி மறைந்து விட்டாரே!
பேய் பிடித்து விட்டிருக்குமோ?
பெ-பெ-ப்-பேய்!
எவனுமே நிரபராதி இல்லே!
அதோ- வாஸ்டன் வருகிறார்!
ஏன் எல்லோரும் இப்படி தலைதெறிக்க ஓடுகிறார்கள்!
நேராக அசல் வக்கீலின் அறைக்குப் போ-அங்கிருக்கும் பெண்ணுக்கு உதவி செய்-வக்கீல் செத்துப்போன உண்மை காரணத்தை கண்டு பிடி!
ஓ - நீ - நீயா?
ம்ம் - ஷோம்ஸ்தான் அது-படு பிரமாதமான மாறுவேடம்- நானே தடுமாறிப் போய் விட்டேன்!


அது சரி, ஒரு நாணயத்தை சற்று முன்னர் கீழே தவற விட்டேனே! என்னாயிற்று?
மரியாதையாக அதை திருப்பிக் கொடுத்து விடு!
நீ தப்பியோடிவிட முடியாது என்னிடமிருந்து!
இதை எறிந்து உன்னை வீழ்த்துகிறேன்
ஆத்திரத்தில் கையில் கிடைத்த குடுவையைத் தூக்கிக் கடாசினார்! ஆனால் உயிலின் மறு பாதித்துண்டால் அடைக்கப்பட்டிருந்த வினிகர் பாட்டில் அது என்பது தெரிந்திருக்க நியாயமில்லை!
இதோ!
தொப்! டமார்!
அப்பாடா ஒரு வழியா என்னோட காசை மீட்டு விட்டேன்!
ஆவ்வ்-
இங்கே என்ன நடந்ததோ- தெரியவில்லையே!
அட - இது!
உயிலின் காணாமல் போன துண்டுப் பகுதி!
ஹையா- புதிர் விளங்கி விட்டது இப்போது! இறந்து போன டோனோவன் தன் ஆஸ்தி முழுவதையும் ஆர்தர் என்று அழைக்கப்பட்ட தன் செல்ல வளர்ப்பு பிராணியான பூனைக்கு அளித்துள்ளார். அதன் பராமரிப்பாளர் ஜானி- இந்த மாளிகையின் நிர்வாக மானேஜர்! அந்தப் பூனை 1903 ஜூலை மூன்றும் தேதி நள்ளிரவு வரை, உயிரோடிருந்தால் சொத்து முழுவதும் மானேஜருக்குச் சொந்தமாகிவிடும்!


சரி-அந்தப் பூனை எங்கே கண்ணில் படவே காணோமே? விசாரிக்க வேண்டும்!
விபரீதம் வக்கீல் ஸார்! இந்த ஆசாமி ஜன்னல் வழியாக வெளியே விழுந்து விட்டதால் பலத்த எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது!
என்னைப் பார்த்ததும் உனக்கு கலவரம் ஏற்படவில்லையா- ஜானி?
எதற்காக ஏற்படவேண்டும்! உங்கள் கேள்வி எனக்கு விளங்கவில்லையே?
அப்படியானால் நீ கொலைகாரன் இல்லை என்பது உறுதி! சரி' உங்கள் பூனைக்கு ஆர்தர் என்றுதானே பெயர் இப்போது அது எங்கே இருக்கிறது?
ஆமாம் பாஸ் அப்படித்தான் அதை அழைப்பார். அங்கே திருப்பத்தில் படுத்து' உறங்கிக் கொண்டிருக்கிறது- ஏன்?
ஐயோ- பேய் என்னை விரட்டி வருகிறது- உதவி!
இந்த திரண்ட சொத்துக்களுக்கு வாரிசு- இதோ!
ஹே என்ன இது- செத்துக் கிடக்கிறதே! இன்று தேதி- சரியாக ஜூலை மூன்று!


நான் விரைந்து செயல்பட வேண்டும். சொத்துக்கள் ஜானியை சென்றடைவதுதான் நியாயம்!
யார் கண்ணிலும் நீ படக் கூடாது!
யோக்கியனான ஜானிக்கு சொத்துக்கள் போய்ச் சேர வேண்டுமெனில் பூனையாக நான் நடிக்க வேண்டும்!
வாஸ்டன் இன்னமும் இங்கேயேதான் இருப்பான் என்று நினைக்கிறேன்!
மிஸ்- இப்போது சற்று தெம்பாக இருக்கிறதா?
இன்னும் கொஞ்சம் தலையை சுற்றுகிறது!
வாஸ்டன்-ஒரு முக்கியமான பணியை உன்னிடம் தரப் போகிறேன்!
கொஞ்சம் முன்னெச்சரிக்கையோடு நீ நடந்து கொண்டிருக்கலாம்- இந்தப் பெண் மறுபடியும் மயங்கி விட்டாள்
போதிய அவகாசம் இல்லை! ரொம்ப அவசரம்- எல்லா உறவினர்களையும், மானேஜரையும் கூட்டி வைத்து உயிலைப் படி உன்னை ஹெர்லாக் ஷோம்ஸ் அனுப்பி வைத்ததாகச் சொல் அவர்களிடம்!


தொடர்ந்து அந்த விசித்திர உயில் வாசிக்கப்பட்டது!
கனவான்களே- உயிலின் வாசகத்தை கேட்டீர்களல்லவா வாரிசு தாரர் இதோ ஜம்மென்று மேஜைமீது உட்கார்ந்து கொண்டிருக்கிறுர் பாருங்கள்!
நான் நம்ப மாட்டேன் இதை!
ஏதோ சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது!
பேசாமல் இந்தப் பூனைக்கு விஷம் கொடுத்து கொன்று விடுவோம்!
எலிஸபெத்! நா- நாநான்-
எக்ஸ்யூஸ் மீ- போலீஸ் வந்திருக்கிறது வெளியே!
வக்கீலின் பிரேதம் கிடக்கும் இடத்திற்கு அவர்களை கூட்டிச் செல்!
உஷ்ஷ்! அதை நான் பார்த்துக் கொள்கிறேன்!
கொலையுண்ட நபரின் பிரேதம் முதல் மாடியில் இருக்கிறது. வாருங்கள்- என்னோடு!
இனி என் அனுமதியின்றி மாளிகையை விட்டு வெளியேறக் கூடாது!
ஆமாம்- யாரும் வெளியேறக்கூடாது!
ஏழு வெவ்வேறு கத்திகளால் ஏற்படுத்தப்பட்ட ஏழு காயங்கள் உடம்பில் காணப்படுகின்றன. கொலைகாரர்கள் ஏழு பேர் என்ருகிறது!
இங்கேதான் ஒரு பெரிய கும்பலே இருக்கிறதே- ஏழு பேரை தேர்வு செய்வது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல!


வாரிசு உரிமை கொண்டாடியவர்களை விசாரித்தாலே உண்மை விளங்கி விடும்!
ஷோம்ஸின் முதல் நிலை விசாரணை அப்படித்தான் ஆலோசனை கூறுகிறது!
ஆமாம்- அப்படித்தான் ஆலோசனை கூறுகிறது!
அன்று மாலை-
ஒரு பூனை இவ்வளவு சமர்த்தாக உணவு உண்ணுவதை நான் கற்பனை செய்து பார்த்ததுகூட இல்லை!
இது ஓர் அதிசயப் பூனை- நள்ளிரவுக்குப் பிறகு பாருங்களேன் வேடிக்கையை!
XII
IX
III
VI
பொய்ங்!
பொய்ங்!
பொய்ங்!
இரவு மணி பன்னிரெண்டு! பூனை ஆர்தர் இன்னமும் உயிரோடிருக்கிறது. எனவே, உயிலின்படி இனி நீங்கள்தான் சொத்துக்களுக்கு வாரிசாகிறீர்கள் ஜானி!
ஆங்- அப்படியா? என்ருல் கொஞ்சமும் நம்பமுடியவில்லையே!
அப்படித்தான் உயிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது!
மனப்பிரமையா- இல்லை கனவு காண்கிறேனு நான்?
பூனை மனிதக் குரலில் பேசுகிறது- நிஜம்தானு?
ஷோம்ஸ் அனுப்பியதாகச் சொன்னுய்- அவர் ஏன் இங்கே வரவில்லை?
அவரை இப்போது இங்கே நீங்கள் காணலாம். வாஸ்டன் என் கைப் பையை கொடு- இப்படி!








பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளி-யிடுபவரும், ஆசிரியரும் S. விஜ-யன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி. போன்: 21159. வெளியீடு எண்:58 அச்சிட்டோர்: தி விஜய்[illegible]ஸ், சிவகாசி-626 12






King viswa - Tamil Comics Ulag